முதன்மைச் செயலர்/ஆணையர் (வ.வ.)
30 செப் 2015

கூடுதல் ஆணையர் (ம.தொ.)
சேப்பாக்கம்
அக் 2015
சென்னை 600 005
வணிகவரி ஆணையர் அலுவலகம்

**சுருக்கம்**

தமிழ்நாடு கேளிக்கைகள் வரிச் சட்டம், 1939 – திரைப்படங்கள் – **"புலி"** தமிழ் திரைப்படத்திற்கு கேளிக்கை வரிவிலக்கு கோரிக்கை நிராகரித்து – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

**வணிகவரி மற்றும் பதிவு (சி1) த்துறை**

**அரசாணை (டி) எண். 400** | **நாள்: 29.09.2015**
**மன்மத, புரட்டாசி 12,**
**திருவள்ளுவர் ஆண்டு, 2046**

**படிக்கப்பட்டது:–**

1. அரசாணை (நிலை) எண்.89, வணிகவரி (ம) பதிவுத்துறை, நாள் 21.7.2011.
2. அரசாணை (நிலை) எண்.2, வணிகவரி (ம) பதிவுத்துறை, நாள் 03.1.2012.
3. வணிகவரி ஆணையர் கடிதம் எண்.சட்டக்குழு–4/29715/2015, நாள் 29.09.2015 தேர்வுக்குழு எண்.63/2015–2016.

------

**ஆணை:–**

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், தமிழ்நாடு கேளிக்கைகள் வரிச் சட்டம், 1939–ன் கீழ் கேளிக்கை வரிச்சலுகை பெற திரைப்படங்களுக்கு தமிழில் பெயர் சூட்டப்பட வேண்டும் என்ற நிபந்தனையுடன் சில கூடுதல் தகுதி வரையறைகளை நிர்ணயம் செய்து ஆணை வெளியிடப்பட்டது. மேலும் வரையறுக்கப்பட்ட நிபந்தனைகளை பூர்த்தி செய்கின்ற திரைப்படங்களை பார்வையிட்டு வரிவிலக்கிற்கு பரிந்துரை செய்ய இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் ஏழு உறுப்பினர்களைக் கொண்ட ஒரு தேர்வுக்குழு அமைத்து ஆணை வெளியிடப்பட்டது.

2. முதன்மைச்செயலர் / வணிகவரி ஆணையர், மூன்றாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில், மேற்கண்ட குழு **"புலி"** திரைப்படத்தை முழுமையாக பார்வையிட்டு, பார்வையிட்ட ஆறு உறுப்பினர்களும் **"புலி"** என்ற திரைப்படம் கேளிக்கை விலக்கு அளிப்பதற்கு தகுதியானது அல்ல என பரிந்துரை செய்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

3. **"புலி"** தமிழ் திரைப்படத்தை பார்வையிட்ட தேர்வுக்குழு உறுப்பினர்களின் பரிந்துரைகள் பின்வருமாறு :–

| வ. எண். | உறுப்பினர் திருவாளர்கள் | பரிந்துரை |
|---|---|---|
| 1. | C. பழனி,<br>இணை ஆணையர் (வவ),<br>சென்னை (தெற்கு) கோட்டம்,<br>சென்னை–6 | புலி என்ற தமிழில் தலைப்பு உள்ள திரைப்படம் என்னால் முழுமையாக பார்க்கப்பட்டது.<br>திரைப்படத்தில் மூட நம்பிக்கைகளை உண்மையாக காட்டப்படும் காட்சிகள் தமிழ் பண்பாட்டிற்கு உகந்ததாக இல்லை.<br>திரைப்படத்தில் வன்முறை காட்சிகள் உள்ளன.<br>இத்திரைப்படம் வரி விலக்கு பெற உள்ள நிபந்தனைகளுக்கு உட்பட்டு இல்லை என்பதால், **இந்த திரைப்படத்திற்கு கேளிக்கை வரி விலக்கு தர தகுதி இல்லை என்பதால் பரிந்துரைக்கவில்லை.** |
| 2. | ம. சி. தியாகராஜன்,<br>துணை இயக்குநர் (நிர்வாகம்),<br>தமிழ் வளர்ச்சி இயக்ககம்,<br>சென்னை 8 | 1) படத்தின் பெயர் 'புலி' தமிழில் அமைந்துள்ளது.<br>2) படத்தின் பாடல் காட்சியில் மகளிரின் ஆடைகள் ஆபாச காட்சிகளாக சில இடங்களில் அமைந்துள்ளன.<br>3) படத்தில் குழந்தையின் கழுத்து அறுபடுவது, சண்டைக் காட்சியில் வன்முறை, கொலைக்காட்சிகள் நேரிடையாக காட்சிப்படுத்தப்பட்டுள்ளன எனவே, **இப்படத்திற்கு வரி விலக்கு வழங்க பரிந்துரைக்கப்பட இயலவில்லை.** |

| | | |
|---|---|---|
| 3. | முனைவர், கா.மு. சேகர், எம்.ஏ.,எம்.பில்., பி.எச்.டி இயக்குநர் | 1) இத்திரைப்படம் என்னால் பார்வையிடப்பட்டது.<br>2) இத்திரைப்படப் பாடல் காட்சிகளில் ஆபாசக் காட்சிகள் அமைந்துள்ளது.<br>3) மனித உயிர்களுக்கு மதிப்பளிக்கவில்லை.<br>4) குழந்தைகளையும், பெண்களையும் வெட்டிக் கொல்லுவது ஏற்புடையதாக இல்லை.<br>5) அதிகமான வன்முறை காட்சிகள் உள்ளதால், **வரி விலக்கு அளிக்கும் நிலை இல்லை.** |
| 4. | T L மகராஜன், பின்னணிப் பாடகர் | திரைப்படம் முழுக்க வன்முறை ஆக்கிரமித்துள்ளது. ஆரம்பத்திலே இரட்டை அர்த்த வசனங்கள், 12 வயது பெண் குழந்தை கழுத்து வெட்டப்படுவதாக காட்டப்படுகிறது. மேலும் படம் முழுவதும் மூட நம்பிக்கைக்கு உயிர் ஊட்ட முனைந்திருப்பதால் **வரி விலக்கிற்கு தகுதியானது அல்ல என பரிந்துரைக்கிறேன்.** |
| 5. | A.L. ராகவன், பழம்பெரும் பின்னணிப் பாடகர் | படத்தின் தலைப்பு தமிழ் பெயர் கொண்டது. 'U' சான்றிதழ் பெற்ற படம் ஆபாசமில்லை. வன்முறை அதிகம் உள்ளது. அரசாணையின்படி வரி விலக்கு அளிக்கக்கூடிய தகுதியில்லை **வரி விலக்கு அளிக்க வேண்டாம்.** |
| 6. | M.N. ராஜம், பழம்பெரும் நடிகை | நல்ல தமிழ் பெயர் கொண்ட படம் 'U' சான்று பெற்றது. ஆபாசம் இல்லை. வன்முறை அதிகம் உள்ளது. வரி விலக்கு அளிக்க தகுதியில்லை. **வரி விலக்கு அளிக்க வேண்டாம்.** |

4. மேற்கண்ட தேர்வுக்குழு உறுப்பினர்களின் பரிந்துரைகளை ஆய்வு செய்ததில், **"புலி"** தமிழ் திரைப்படத்தை பார்வையிட்ட ஆறு உறுப்பினர்களும் இத்திரைப்படத்திற்கு கேளிக்கை வரிவிலக்கு அளிப்பதற்கு பரிந்துரை செய்யவில்லை என்பதாலும், அரசாணை நிலை எண்.89, வணிகவரி மற்றும் பதிவு (சி1) துறை, நாள் 21.7.2011–ல் நிர்ணயிக்கப்பட்டுள்ள தகுதி வரையறைகளை இத்திரைப்படம் பூர்த்தி செய்யவில்லை என்பதாலும், தமிழ்நாடு கேளிக்கைகள் வரிச் சட்டம், 1939–ன் கீழ் **"புலி"** தமிழ் திரைப்படத்திற்கு கேளிக்கை வரி விலக்கு அளிக்க இயலாது என அரசு முடிவு செய்து, அவ்வாறே ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

எஸ்.கே. பிரபாகர்,
அரசு முதன்மைச் செயலாளர்.

<u>பெறுநர்</u>
முதன்மைச் செயலர்/வணிகவரி ஆணையர், சேப்பாக்கம், சென்னை–5.
செயலாளர், தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித்துறை, சென்னை–9.
இயக்குநர், தமிழ்வளர்ச்சி துறை, சென்னை–8.
சம்பந்தப்பட்ட படத்தயாரிப்பாளர்.
நகல்:
சிறப்பு நேர்முக உதவியாளர், அமைச்சர் (வணிகவரி மற்றும் பதிவு) அலுவலகம், சென்னை–9.
சுற்றுலா மற்றும் பண்பாட்டுத்துறை, சென்னை–9.
இருப்புக்கோப்பு / உதிரிகள்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

29/9/2015

பிரிவு அலுவலர்.
29/9/15